## இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை - 2015

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் அதிகாரச் சட்டத்தின் 76(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென தான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு ஐந்தொகைத் தினத்தில் உள்ளவாறான தீர்மானிக்கப்பட வேண்டிய நியாயப் பெறுமதியில் கொண்டு செல்லும் பெறுமதியில் பொருண்மையாக வேறுபாடு இல்லாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக மன்றத்தினால் அதனது சொத்துக்கள், பொறித்தொகுதி, மற்றும் உபகரணங்கள் என்பவை மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், தொடர்ச்சியாகப் பாவனையில் உள்ள 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்றாக தேய்மானத்திற்குள்ளானதுமான ரூபா 4,698,221 கிரயமுடைய சொத்துக்களது உள்ளவாறான பெறுமதியைக் காட்டுவதற்காக நியமத்தின் பிரகாரம் அவற்றை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின்போது இனங்காணப்பட்ட கையிருப்புப் பெறுமதியை இறுதிக் கையிருப்பாகக் கணக்கிலிடப்பட வேண்டுமாயினும், ஆண்டின் இறுதியில் நேரடிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தும், புத்தகப் பெறுமதியான ரூபா 740,593 இறுதிக் கையிருப்பாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

ஐந்து வருமானத் தலைப்புகள் தொடர்பாக நிதிக்கூற்றிக்களில் காணப்படும் மீதிகள் மற்றும் பட்டோலை மீதிகள் என்பவற்றுக்கிடையே ரூபா 144,250 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

#### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஜனவரி 01 ஆந் திகதி முதல் ஒழுங்குபடுத்தல் மன்றத்திடம் கையளிக்கப்பட்டிருந்த 06 கணக்கு மீதிகள் ஒழுங்குபடுத்தல் மன்றத்தால் ஆரம்ப மீதியாகக் கணக்குகளுக்கு கொண்டு வரும் போது ரூபா 13,488,488 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) அணுச்சக்தி மன்றத்தின் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளரின் (நிதி மற்றும் நிர்வாகம்) 2015 செப்டெம்பர் 30 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்ட 03 சொத்துத் தலைப்புகளது பெறுமதியை மன்றத்தின்

புத்தகங்களில் பதிவு செய்யும்போது ரூபா 4,466,846 கூட்டுத்தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(இ) அணுசக்தி மன்றத்தின் கணக்குகளின் பிரகாரம் மன்றத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய மீதி ரூபா 1,198,533 ஆகும். அவ்வாறிருக்க, மன்றத்தினது கணக்குகளின் பிரகாரம் அவ்வாறான மீதியொன்று இனங்காணப்படவில்லை.

(ஈ) அணுசகத்தி மன்றத்தின் கணக்குகளின் பிரகாரம் மன்றத்தால் ரூபா 4,610,165 கடன்பட்டோர் மீதி காட்டப்பட்ட போதும், மன்றத்தினது புத்தகங்களின் பிரகாரம் அம் மீதி ரூபா 4,591,857 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

1994 ஜூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் முறையான ஊக்குவிப்புப் படி நடைமுறையொன்றினைத் தயாரிக்காமலும் பொதுத் திறைசேரியின் அதற்கான அங்கீகாரத்தைப் பெறாதும் மன்றத்தினாலும் 2015 ஆம் ஆண்டில் அதன் ஊழியர்களுக்கு ஊக்குவிப்புப் படியாக ரூபா 256,500 ஐ ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மன்றத்தில் மீளாய்வாண்டினது செயற்பாட்டுப் பெறுபேறுகள் ரூபா 3,479,000 பற்றாக்குறையாகும்.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

(அ) 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசகத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அணுக்கதிரியிக்கலிருந்து நிவாரணம் பெறுதல் மற்றும் சாத்தியமான ஆபத்துகளிலிருந்து நபர்களையும் சுற்றாடலையும் பாதுகாத்தல் மற்றும் தோற்றுவாய்கள் மற்றும் வசதிகளதும் பிரவேசம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றிற்குத் தகுதியானவாறு ஏற்பாடுகளைச் செய்தல், அதன் மூலம் நபர்களதும் சுற்றாடலினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், இலங்கையினால் குறிப்பிடப்பட்ட அணுச்சக்தி துறைக்குரிய சர்வதேச நியமங்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு அனுசரணையாக இருப்பதாக உறுதி செய்தல் என்பன இம் மன்றத்தின் நோக்கங்களாகும். அதிகாரச் சட்டத்தின் 87(1) ஆம் பிரிவின் மூலம் மன்றத்திற்குத் தேவையான சட்டபூர்வ அதிகாரத்தைப் பெறுவதற்கான விதிகளைத் தயாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய 2015 ஆம் ஆண்டின்போது மன்றத்தினால் 2 வீதிகளையும் ஒரு கட்டளையையும் தயாரித்து, 2015 ஜூலை 21 ஆந் திகதிய 1924/27 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரித்திருந்தது. அதிகாரச் சட்டத்தின் 87(1) ஆம் பிரிவின் (அ) தொடக்கம் (ஊ) வரையிலான விடயங்களுக்குரிய ஏனைய விதிகளைத் தயாரிப்பதற்கு நிறுவனத்தினது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்டிருந்தபோதும், இத் துறையில் விசேட நிபுணத்துவம் வாய்ந்த உத்தியோகத்தர்களைத் ஈடுபடுத்த முடியாது போனமையால் குறித்த விதிகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் தாமதமடைந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 39 ஆன போதிலும், போதியளவு ஊழியர் மட்டத்தைப் பேணவும் ஊழியர் எண்ணிக்கை தொடர்பில் கால நிதி மீளாய்வொன்றினை மேற்கொள்ளாமையின் காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சிரேஷ்ட பதவி நிலைகளில் ஒரு வெற்றிடமும், மூன்றாம் நிலையில் 09 வெற்றிடங்களும் இரண்டாம் நிலையில் 06 வெற்றிடங்களும் ஆரம்ப நிலையில் 04 வெற்றிடங்களுமாக நிறுவனத்தில் 20 வெற்றிடங்கள் நிலவின.

(ஆ) மன்றத்தின் விஞ்ஞான அறிவு மிக்க உத்தியோகத்தர்களது வெற்றிடம் காரணமாக, மன்றத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நிறைவேற்றிய அணுக்கதிரியிக்கப் பரிசோதனைகள் தாமதமாகியதுடன், முகாமைத்துவ ஊழியர்கள் வெற்றிடங்கள் காரணமாக கணக்கீட்டுப் பிரிவு மற்றும் தாபனப் பிரிவு என்பவற்றில் போதியளவு வேலைப் பகிர்வை மேற்கொள்ள முடியாதிருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தின் நடவடிக்கைகளைப் பரீசீலித்து அறிக்கையிடுவதற்கு 2015 ஆம் ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றோ அல்லது உத்தியோகத்தர் ஒருவரோ நியமிக்கப்பட்டிராததுடன், உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரித்து அதனை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2016 பெப்ரவரி 01 ஆந் திகதி தொடக்கம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தபோதும், அவரின் நடவடிக்கைகளுக்காக உதவிபுரிவதற்கு வேறெந்த உத்தியோகத்தரும் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

**(அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு**
சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களைப் பெறுமதியிடுதல், பதிவேட்டிலிடல், பாதுகாத்தல் மற்றும் மன்றத்தின் வளங்களை நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக வினைத்திறனுடன் உபயோகித்தல்

**(ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு**
கடன்பட்டோர் மற்றும் பிற பெற வேண்டியனவற்றை தாமதமின்றிச் சேகரித்து அவற்றைக் கணக்கிலிடுதல்

**(இ) மனிதவள முகாமைத்துலம்**
மன்றத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான கடமை மற்றும் அளவு என்பவற்றின் பிரகாரம் மனிதவளத்தை முகாமை செய்தல்

**(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு**
சாத்தியமானதாகத் தயாரித்து கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தல்.